**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**Crl.M.P. No. 244 /2025**

**Dated : 02.09.2025**

பெயர் :– அருண்பாண்டியன்
த/பெ. :– அன்பழகன்
வயது :– 34/2025

**சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது**.

பார்வதி எனது தாயார் ஆவார். கடந்த 29.01.2024 அன்று காலை 08.00 மணியளவில் எனது வீட்டு வாசலில் எனது அம்மா அலறும் சத்தம் கேட்டது. நான் ஓடி சென்று பார்த்தபோது எனது அம்மா கீழே விழுந்துகிடந்தார். அவரை நான் துாக்கிய போது ராஜேந்திரன் மற்றும் அசோகன் தன்னை அடித்ததாக கூறினார். ஏன் எனது அம்மாவை அடித்தீர்கள் என நான் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் உன் அம்மாவை அடித்து கொல்லவேண்டும் என்பதற்காக தான் அடித்தோம். ஒழுங்கு மரியாதையா இந்த இடத்தை விட்டு ஓடிவிடுங்கள். இந்த இடம் எங்களுககு சொந்தமான இடம். உங்களை அடித்து போட்டால் கூட கேட்க ஆள் கிடையாது. உங்களை கொன்று விடுவோம் என அருவாளை காட்டி மிரட்டினார்கள். அப்போது தரணி என்பவர் அசிங்கமான வார்த்தையால் என்னை திட்டி என் அப்பா உன் அம்மாயை அடித்துவிட்டார். நீ என் மேல் கை வைத்து பார் உன்னை நான் எங்கு கொண்டு போய் வைக்கிறேன் பார் என சொல்லி திட்டினார். இந்த சம்பவம் சம்பந்தமாக நான் முதலமைச்சர் தனி பிரிவிற்கும், DGP க்கும், மாவட்ட ஆட்சியர் அலுலகத்திலும் புகார் கொடுத்தோம். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எனது அம்மா இந்நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளார். அந்த புகாரில் மேல் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.